புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

**இலங்கை கலைக் கழகம்**

# வெற்றிடங்கள்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும், 1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை கலைக் கழகத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகுதியுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் - 01 பதவி

| | | |
|---|---|---|
| நியமனத்தின் தன்மை | : | நிரந்தரம் |
| சேவை வகை | : | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) - தரம் III |
| சம்பளக் குறியீடு | : | MA 2-1 - 2025 |
| சம்பள அளவுத்திட்டம் | : | ரூ. [50,540 - 10x540 - 7x630 - 4x890 - 20x1,190 - 87,710] |

<u>சேர்ப்புக்கான தகுதிகள்:</u>
<u>(வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு)</u>

கல்வித் தகுதி : தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பில், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகாண்மை (NVQ) மட்டம் ஐந்துக்கு (05) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

பதவிக்குரிய பிற சிறப்புத் தகுதிகள்:

- இணையதள வடிவமைப்பு மற்றும் உருவாக்கம் (Web Designing & Development)
- கணினி கிராபிக் வடிவமைப்பு (Computer Graphic Designing)
- ஆங்கிலம்/சிங்களம் மொழிகளில் தேர்ச்சி
- தொழில்முறை அனுபவம்

## முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) - 01 பதவி

| | | |
|---|---|---|
| நியமனத்தின் தன்மை | : | நிரந்தரம் |
| சேவை வகை | : | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) – தரம் III |
| சம்பளக் குறியீடு | : | MA 2-1 - 2025 |
| சம்பள அளவுத்திட்டம் | : | ரூ.[46,220 - 10x540 - 7x630 - 4x890 - 20x1,190 - 83,390/-] |

**சேர்ப்புக்கான தகுதிகள்:**

<u>வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு</u>

கல்வித் தகுதி : க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ், கணிதம், ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த (உயர் தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர).

**பிற சிறப்புத் தகுதிகள்:**

கணினி பயன்பாடு, கடிதங்கள்/அறிக்கைகள் தயாரித்தல், தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு, ஆங்கிலம் /சிங்களம் மொழிகளில் தேர்ச்சி, அது தொடர்பான அறிவு மற்றும் தொழில்முறை அனுபவம் சிறப்புத் தகுதிகளாகக் கருதப்படும்.

<u>உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு</u>

ஆரம்ப தொழில்நுட்பமற்ற சேவை வகையில் பின்வரும் “அ“, “ஆ“ மற்றும் “இ“ ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்:

(அ) க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ், கணிதம், ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி தட்டச்சு/பதப்படுத்தும் பாடநெறியை பயின்றிருத்தல் அல்லது அதற்கு இணையான தேர்ச்சி கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

(ஆ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) ஆரம்ப தொழில்நுட்பமற்ற சேவை வகையில் குறித்த திகதிக்கு உடனடியாக முன்நிற்கும் நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

பொதுவான தகவல்கள் மற்றும் நிபந்தனைகள்

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:**
2026 அக்டோபர் மாதம் ---- ஆம் திகதி ஆகும்.

**வயதெல்லை (அனைத்துப் பதவிகளுக்கும்):**
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(அரசு கூட்டுத்தாபனங்கள்.˙.சபைகள்.˙.சட்டப்பூர்வ நிறுவன ஊழியர்களுக்கு மேல் வயதெல்லை பொருந்தாது).

**தேர்ந்தெடுக்கும் முறை:**
அமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். சேவை நிபந்தனைகள்: வெளிவாரி விண்ணப்பதாரர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரி மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார். தகுதிகாண் காலத்தில் அவரது கடமைகள் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்து, முதலாவது கடமைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தால் தகுதிகாண் கால முடிவில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவார். நிறுவனத்தில் ஏற்கனவே நிரந்தர நியமனம் பெற்ற உள்வாரி விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் குறிப்பிட்ட கண்காணிப்புக் காலத்திற்கு உட்படுத்தப்படலாம்.

**சம்பளம்:**
மேலே குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டம் 2025/03/25 திகதியிட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இதன் ஆரம்ப சம்பளப் படிநிலை 2027.01.01 திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். வெளிவாரி விண்ணப்பதாரர்கள் சேர்க்கப்படும்போது சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்பப் படிநிலையில் நிறுத்தப்படுவர். உள்வாரி விண்ணப்பதாரர்களைச் சேர்க்கும்போது நிறுத்தப்பட வேண்டிய சம்பளப் படிநிலை நிறுவனக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்படி தீர்மானிக்கப்படும். அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளுக்கும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் உரிமையுடையவர்.

**பொது நிபந்தனைகள்:**

1. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும் என்பதுடன், நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவை செய்யவும், பதவியின் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற உடலளவிலும் மனதளவிலும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குள் தேவையான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும், தவறினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. நியமனம் தொடர்பாக எவ்விதத்திலேனும் செல்வாக்கு செலுத்துவது தகுதியின்மையாகக் கருதப்படும்.
4. இந்தப் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பில் இலங்கை கலைக் கழகத்தின் செயற்குழுவின் தீர்மானமே இறுதியானது.

**விண்ணப்பிக்கும் முறை**

1. விண்ணப்பப் படிவத்தை இலங்கை கலைக் கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான [www.artscouncil.lk](http://www.artscouncil.lk) இலிருந்தோ அல்லது உத்தியோகபூர்வ முகநூல் பக்கமான [www.facebook.com/artscouncilofsrilanka](http://www.facebook.com/artscouncilofsrilanka) இலிருந்தோ பதிவிறக்கம் செய்யலாம். அல்லது அதே மாதிரியில் உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தையும் அனுப்பலாம்.
2. விண்ணப்பம் தெளிவானதாகவும் வாசிக்கக்கூடியதாகவும் கையெழுத்திலோ அல்லது கணினியில் தட்டச்சு செய்தோ அனுப்பப்பட வேண்டும்.
3. உரிய சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் என்பதுடன், அவை விண்ணப்பதாரராலேயே கையொப்பமிட்டு சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாக இருந்தால், ஒரு பதவிக்கு ஒன்று வீதம் தனித்தனியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. விண்ணப்பக் கடித உறையின் மேல் இடது மூலையில் உரிய பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும். ஏனைய நிறுவனங்களின் (அரசு கூட்டுத்தாபனங்கள் /சபைகள்/சட்டப்பூர்வ நிறுவனங்கள்) ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரிய நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்பட வேண்டும்.
6. குறிப்பிட்ட மாதிரியின்படி தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. இறுதித் திகதிக்குப் பிறகு கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் சான்றிதழ் பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு **பதிவுத் தபாலில் மட்டுமே** அனுப்பப்பட வேண்டும்:

    தலைவர்,
    இலங்கை கலைக் கழகம்,
    4 ஆம் மாடி, செத்சிறிபாய 2 ஆம் கட்டம்,
    பத்தரமுல்லை.

முழுமையான விவரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்திற்கு **www.artscouncil.lk** தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

தொலைபேசி: 011-2177627


தலைவர்,
இலங்கை கலைக் கழகம்,
4 ஆம் மாடி, செத்சிறிபாய
2 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.